**நல்லூர் பிரதேசசபை**
**யாழ்ப்பாண மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1. நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2016 ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2017 மார்ச் 24 திகதியும் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2016 மார்ச் 24 திகதியும் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் 2016 ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2017 ஆகஸ்ட் 31 இல் சபையின் செயலாளருக்கு வழங்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து நல்லூர் பிரதேசசபையின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமை அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

சபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும்போதும் அவற்றினைச் சமர்ப்பிக்கும் போதும் பின்பற்றப்பட்டிருக்க வேண்டிய கணக்கீட்டுக் கொள்கைகள் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

#### 1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடு அவதானிக்கப்பட்டுள்ளது.

பிரதேசசபைக்குச் சொந்தமான 02 வாகனங்கள் சபையின் பெயருக்கு உரிமை மாற்றம் செய்யப்பட்டிருக்காததுடன் அவற்றின் பெறுமதிகளும் கணக்குக்குக் கொண்டுவரப்பட்டிருக்காமையினால் மோட்டார் வாகனங்களின் பெறுமதி கணக்குகளில் குறைவாகக் காட்டப்பட்டுள்ளது.

#### 1.3.3 பெறவேண்டிய கணக்குகள்

05 வருடங்களுக்கு மேலாக முற்பணமாகச் செலுத்தப்பட்ட ரூபா 206,437 தீர்வு செய்யப்படாமலுள்ளது.

#### 1.3.4 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை

சபையினால் அளவை பதிவேடு, ஆதனங்கள் விற்பனவு வரி பதிவேடு, மின்சார தொடர்பு பதிவேடு ஆகிய பதிவேடுகள் பேணப்பட்டிருக்கவில்லை.

**1.3.5 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை**

தேவையான சான்றுகள் இல்லாமையின் காரணமாக ரூபா 148,246 பெறுமதியான 02 கொடுக்கல்வாங்கல்களை கணக்காய்வில் திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்த முடியவில்லை.

**1.3.6 சட்டங்கள் விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணங்காமை**

பின்வரும் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
| --- | --- |
| 10 ஒக்டோபர் 1990 ஆம் திகதிய 41/90 ஆம் இலக்க பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் சுற்றுநிருபம் | சபையின் வாகனங்களிற்கு எரிபொருள் நுகர்வுப் பரீட்சிப்பு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின்படி மீளாய்வாண்டில் சபையின் செயற்பாடுகளின் பெறுபேறு மீண்டுவரும் செலவிலும் கூடிய வருமானமாக ரூபா 83,423,712 ஆக இருந்ததுடன் நேரொப்பான முன்னைய ஆண்டில் செலவிலும் கூடிய வருமானமாக ரூபா 64,903,029 ஆக இருந்தது. இது மீளாய்வாண்டுக்கான நிதிப்பெறுபேறுகள் ரூபா 18,520,683 ஆல் அதிகரித்துள்ளமையைக் காட்டுகின்றது.

**2.2 பகுப்பாய்வுரீதியான நிதி மீளாய்வு**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின்படி மீளாய்வாண்டிற்கான சபையினுடைய நிதிப்பெறுபேறுகள் தேறிய மிகையாக ரூபா 351,314 விளைந்திருப்பதுடன் நேரொப்பான முன்னைய ஆண்டின் செயற்பாட்டின் தேறிய மிகையாக ரூபா 679,090 விளைந்திருந்தது. இது மீளாய்வாண்டுக்கான இறுதி நிதிப்பெறுபேறுகள் ரூபா 327,776 ஆல் குறைவடைந்துள்ளமையைக் காட்டுகின்றது.

**2.3 தொழிற்படு மூலதன முகாமைத்துவம்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின்படி மீளாய்வாண்டிற்கான சபையினுடைய தொழிற்படு மூலதனம் ரூபா 321,447,826 விளைந்திருப்பதுடன் நேரொப்பான முன்னைய ஆண்டின் தொழிற்படு மூலதனம் ரூபா 264,111,088 விளைந்திருந்தது. இது மீளாய்வாண்டிற்கான தொழிற்படு மூலதனம் ரூபா 57,336,738 ஆல் அதிகரித்துள்ளமையைக் காட்டுகின்றது.

**2.4 வருமான நிர்வாகம்**

**2.4.1 வருமான சேகரித்தலின் செயலாற்றல்**

செயலாளரினால் சமர்ப்பிக்கப்பட்டவாறு மீளாய்வாண்டு தொடர்பான மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் மீதான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | 2016 | | |
|---|---|---|---|
| **வருமான விடயம்** | **மதிப்பிடப்பட்டது** | **உள்ளபடியானது** | **திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட நிலுவைகள்** |
| | **ரூபா** | **ரூபா** | **ரூபா** |
| | 000 | 000 | 000 |
| ஆதனவரிகள் | 2,725 | 2,600 | 6,899 |
| குத்தகை வாடகைகள் | 25,289 | 21,454 | 983 |
| அனுமதிப்பத்திரக் கட்டணம் | 2,826 | 3,450 | - |
| ஏனைய வருமானம் | 110,002 | 125,898 | 192,878 |
| **மொத்தம்** | **140,842** | **153,402** | **200,760** |

**2.4.2 ஆதனவரி**

ஆதனவரி ரூபா 5,915,521 இன்றுவரை அறவிடப்படாமல் நிலுவையாகவுள்ளது.

**2.4.3 குத்தகை மற்றும் வாடகை**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கடைக் குத்தகை ரூபா 146,916 அறவிடப்படாது நிலுவையாகவுள்ளது.

(ஆ) சந்தைக்கடை வாடகை ரூபா 577,074 இன்றுவரை சபையினால் அறவிடப்படாதுள்ளது.

**2.4.4 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் 3 மாதங்களுக்கான நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 965,000 சபையினால் அறவிடப்படாதுள்ளது.

(ஆ) மீளாய்வாண்டிலும் முன்னைய ஆண்டுகளிலும் காணிப்பதிவாளர் நாயகத்திடமிருந்து ரூபா 142,049,877 முத்திரைக் கட்டணம் அறவிடப்படாதுள்ளது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 03 அனுமதியற்ற தொலைத்தொடர்புக் கோபுரங்கள் தொடர்பாகச் சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சபையின் செயற்பாடுகளை வினைத்திறனாக மேற்கொள்வதற்கு வருடமொன்றிற்குக் குறைந்தது 04 கணக்காய்வு முகாமைத்துவக் குழுக் கூட்டம் நடாத்தப்பட வேண்டும். எனினும் குறித்த சபையில் மீளாய்வாண்டில் 02 கணக்காய்வு முகாமைத்துவக் குழுக் கூட்டம் மட்டுமே நடைபெற்றுள்ளது.

(இ) சபையில் 136 பதவியினருக்கு அனுமதியளிக்கப்பட்டிருந்தபோதும் 117 பதவியினரே கடமையாற்றுகின்றனர். அதன்படி 06 பதவியினர் பற்றாக்குறையாக உள்ளனர்.

### 3.2 குறைப்பயன்பாடுடைய சொத்துக்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ரூபா 5,354,000 பெறுமதியான காணி 03 வருடங்களாகப் பயன்பாடின்றிக் காணப்படுகின்றது.

(ஆ) ரூபா 823,060 பெறுமதியான கிராமியச்சந்தை பயன்படுத்தப்படாமலுள்ளது

### 3.3 ஒப்பந்த நிர்வாகம்

வரவுசெலவுத்திட்டத்தில் திட்டமிடப்பட்ட ரூபா 23,610,000 பெறுமதியான 11 மூலதன வேலைகள் முற்றாக நிறைவேற்றப்படாமலுள்ளது.

## 4. நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

**செலவினக் கட்டமைப்பு**

பாதீட்டுச் செலவினங்களுக்கும் உண்மைச் செலவினங்களுக்கும் இடையே ரூபா 174,875 தொடக்கம் ரூபா 7,111,107 வரையான செலவின வேறுபாடு ஏற்பட்டுள்ளமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டுள்ளது.